ஸ்ரீ:

உபந்யாஸ மஞ்ஜரீ.

1-வது பாகம்.

1. மதுரை. 2. திருஞானசம்பந்தர். 3. ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர். 4. ஸ்ரீசங்கர பகவத்பாதாள். 5. பக்தி.

இவைகள் அடங்கினது.

மதுரை கல்லூரி ஸம்ஸ்கிருத பண்டிதர்
கோ. வை. சுப்பிரமணிய சாஸ்திரிகளால்
எழுதப்பட்டது.

கும்பகோணம்.
ஸ்ரீ கோமளாம்பா பிரஸ்ஸில்
அச்சிடப்பட்டது.

விலை] 1924 [அணா. 4.

முகவுரை.

உபந்யாஸ மஞ்ஜரீ.

இப்பெயர்கொண்ட புத்தகமானது பாகம்பாகமாய் வெளியாகும். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் துவாதசாந்தம் என்ற மதுரைமாநகரில் துந்துபிஷு ஐப்பசிமீ 20உ ஞாயிற்றுக்கிழமை முதல் கார்த்திகை–மீ 20உ செவ்வாய்க்கிழமை வரையில் எழுந்தருளியிருந்தபோது, பக்தாநுக்ரஹார்த்தமாக ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேச்வராள் ஆலயத்தில் கல்யாண மண்டபத்திலும் ஆயிரக்கால் மண்டபத்திலும் ஸ்ரீமஹா ஸ்வாமிகளால் அனேக அரியவிஷயங்கள் உபன்யஸிக்கப்பட்டன.

அவைகளை அவ்வப்போது குறிப்பாய் எழுதிவைத்துள்ளேன். என் நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி உலகத்தில் யாவருக்கும் பயன்படக்கூடிய அரிய விஷயங்களாயிருப்பதால் அவைகளை "உபந்யாஸமஞ்சரீ" என்ற பெயருடன் பாகம் பாகமாய் வெளிப்படுத்த முன் வருகிறேன். ஆஸ்திகர்களான பெரியோர்கள் எவ்விதத்தாலும் ஆதரித்து இக்காரியத்தை நிர்விக்னமாய்முடிவுபெறும்படி உபகரிக்க வேண்டுகிறேன்.

மற்றும் இப்புத்தகத்தை வெளியிடுவதற்கு வேண்டிய உதவி புரிந்தவரும் **(स्वधर्मसेवासदाचारपरोपकारपरायण)** ஸ்வதர்ம ஸேவா ஸதாசார பரோபகார பராயணருமான மதுரை ஹைக்கோர்ட்டுவக்கீல் மகா-ா-ஸ்ரீ ஆர்பாதி என். நடேசய்யரவர்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

இங்ஙனம்.

கோ. வை. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.




மதுரையின் பெருமை.

மதுரைமாநகரமானது சிறந்த புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திலே, மிகப்புகழ்பெற்ற பாண்டிய நாட்டில், திருவாப்பனூர், திருக்கொடுக்குன்றம், [பிரான்மலை] திருப்புத்தூர், திருப்பூவனம், திருச்சுழியல், திருக்கானப்பேர், [காளையார்கோயில்] திருவாடானை, திருப்புனவாயில், திருவிராமேச்வரம், திருநெல்வேலி, திருக்குற்றாலம், திருப்பரங்குன்றம், திருவேடகம் என்னும் திருவாசகத் திருப்பதிகமேறப்பெற்ற சிறந்த சிவஸ்தலங்கள் பதின்மூன்றும் தன்னைச்சூழ அவற்றின் நடுநாயகமாய்ப் பிரகாசிக்கும் சிறப்புப் பெற்று விளங்குவது.

அது மூர்த்திவிசேஷம், தீர்த்தவிசேஷம், ஸ்தலவிசேஷம் என்னும் முச்சிறப்பும் ஒருங்கு பெற்றிருப்பது.

அந்நகரம் வேதாகமங்களால் சிறப்பித்துச்சொல்லப்படுகிற द्वादशान्तम् துவாதசாந்தம் என்ற பெயர்பெற்றது.

மேலும், அது சிவநகரம், கதம்பவனம், ஜீவன் முக்திபுரம், கன்னிபாபுரம், திருவாலவாய், சமஷ்டிவித்யாபுரம், நான்மாடக்கூடல் என்னும் பல திருநாமங்களையுடையது.

அது ஆதிதீர்த்தம், ஞானதீர்த்தம், முக்திதீர்த்தம், சிவகங்கை, தீர்த்தஉத்தமம், தருமதீர்த்தம், காமதீர்த்தம் என்னும் பலகாரணப் பெயர்களையுடைய வைகை நதியையும், எழு கடல் தீர்த்தத்தையும் தன்னிடத்தில் பொருந்தியது.

அம்மதுரை,

"திறப்படுமுலகமெங்கும் வியாபியாய் சிறந்துநிற்கும்,
அறப்பெருங்கடவுள் சோமசுந்தரமதனுலன்றோ
கறைக்கதிர்வடிவேற்றென்னன் கையிற்பொற்பிரம்புபட்ட
புறத்தடித்தழும்பு மூன்றுபுவனமும் பட்டதன்றோ."

எனக் கூறியபடி சோமசுந்தரப்பெருமானே எவ்வுலகத்தும் வியாபியாயுள்ளவர் என எல்லோருமறியக் காட்டியெழுந்தருளியிருக்குமிடமாயிருப்பது.

மேலும் அது, இந்திரன் பழிதீர்த்தல் முதலிய அறுபத்துநான்கு திருவிளையாடற்கிருப்பிடமாயிருப்பதும் அகஸ்தியர் முதலிய முனிவர்களும், இந்திரன் முதலிய தேவர்களும், யானை முதலிய விலங்குகளும் வந்து பூஜிக்கப்பெற்றதும், இஷ்டசித்திகளையளித்துவருவதும், சிவபெருமான், முருகவேல், அகஸ்தியர் என்னுமிவர்களாலாராயப் பெற்ற தமிழை 'பொய்யடிமையில்லாத புலவர்க்குமடியேன்' எனச் சுந்தரமூர்த்திநாயனாரால் சிறப்பித்துப் போற்றப்பெற்ற நற்கீரர் முதலிய நாற்பத்தொன்பது புலவர் ஆராய்ச்சி செய்த தமிழ்ச்சங்கத்தையுடையதுமாம்.

தவிரவும் இம் மதுரைமாநகரமானது இந்திரனாலே மூலலிங்கத்துக்கு விண்ணிழி விமானம் நிருமிக்கப்பெற்றதும், சக்தியும், சிவனும், ஷண்முகத்தேவும், செங்கோலாட்சி செய்ததும், பன்னிருதிருப்பதிகங்களும், திருவாசக முதலிய அருட்பாக்களுமேறப்பெற்றதும், இன்னும் எண்ணரிய மஹிமைகள் பொருந்துதலால் தனக்கு ஒப்புயர்வுமில்லாததுமாகும்.

॥ श्रीमीनाक्षीसुन्दरेश्वराभ्यां नमः ॥

உபந்யாஸ மஞ்ஜரீ.

श्रीकान्तो मातुलो यस्य जननी सर्वमङ्गला ।
जनकश्शङ्करो देवः तं वन्दे कुञ्जराननम् ॥

ஶ்ரீகாந்தோ மாதுலோ யஸ்ய ஜநநீ ஸர்வமங்களா ।
ஜநகஶ்ஶங்கரோ தேவஸ்தம் வந்தே குஞ்ஜராநநம் ॥

(1) மதுரை.

இம்மதுரைமாநகரமானது, உள்ளும் புறமும் எங்கும், மதுரமாய் இருப்பதால், "மதுரை" என்ற பெயர் வாய்ந்திருக்கிறது. மனுஷ்யர்களால், பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்தலங்களைக்காட்டிலும், தேவர்களாலும் ரிஷிகளாலும் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்தலங்கள் மேன்பட்டதாகும். அவைகளிலும், தேவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டவை மிக்கச்சிறப்புற்றவை. அந்நகரங்களில், இம்மதுரைமாநகரம் ஒன்றாகும். தேவர்கள் முதலான மஹான்கள் பகவானுடைய தியானத்தாலேயே, தாங்கள் பகவத்கிருபை பெற்றிருப்பினும், நம்போன்றவர்களின் க்ஷேமத்தையே கருதி, தீர்த்தங்களையுண்டாக்கியும், க்ஷேத்திரங்களில் தங்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பரமேசுவரனைப் பூஜித்தும் வந்திருக்கிறார்கள். க்ஷேத்திரமும் தீர்த்தமுமாகிய இவ்விரண்டுமுள்ள ஸ்தலங்கள், நாயன்மார்களால் வெகுவாய்ப் புகழப்பட்டிருக்கின்றன. அறுபத்து நான்கு திருவிளையாடல்களால் பிரக்யாதிபெற்றதும், நாயன்மார்களால் புகழப்பட்டதுமான

श्रीहालास्यं (ஸ்ரீஹாலாஸ்யம்) திருவாலவாய் என்ற இம்மதுரை மாநகரின் பெருமையை நம்போன்றவர்களால் எடுத்துக் கூறமுடியாது. அத்வைதத்தையே நிலைநாட்டுவதற்கு, அவதரித்த ஸ்ரீமத் பகவத்பாதர்களும், ஸௌந்தர்யலஹரியில் இம்மதுரையை முக்தி க்ஷேத்ரங்களில் ஒன்றாக, வர்ணித்திருக்கிறார்கள்:—

विशाला कल्याणी स्फुटरुचिरयोध्या कुवलयैः
कृपाधारा धारा किमपि मधुरा भोगवतिका ।
अवन्ती दृष्टिस्ते बहुनगरविस्तारविजया
ध्रुवं तत्तन्नाम्ना व्यवहरणयोग्या विजयते ॥

விஶாலா கல்யாணீ ஸ்புடருசிரயோத்யா குவலயை:
க்ருபாதாரா தாரா கிமபி மதுரா போகவதிகா ॥
அவந்தீ த்ருஷ்டிஸ்தே பஹுநகரவிஸ்தாரவிஜயா
த்ருவம் தத்தந்நாம்நா வ்யவஹரணயோக்யா விஜயதே ॥

தேவியே! உமது அந்தாவிகாஸமான விசால திருஷ்டியும், விஸ்மிதையான கல்யாணி திருஷ்டியும், ஸ்மேரகனீனிகையான அயோத்தியா திருஷ்டியும், அலஸையான தாரா திருஷ்டியும், லலிதையான மதுரா திருஷ்டியும், ஸ்நிக்தையான போகவதீ திருஷ்டியும் முக்தையான அவந்தீ திருஷ்டியும், பிராந்தகனீனிகையான விஜயா திருஷ்டியும் விளங்குகிறது.

விசாலமாகவிருப்பதால் விசாலை யென்றும், ஆச்ரித மங்களகரமாகையால் கல்யாணீ என்றும், கருநெய்தல் களைப் பார்க்கிலும் பிரகாசமான காந்தியுள்ளதாகையால் கருநெய்தல்களால் யுத்தஞ்செய்து ஜயிக்க சாத்தியப் பாடதாகையால் அயோத்தியை என்றும், தயாப்பிரவா

கமுள்ளதால் தாரையென்றும், மாதுரியமுள்ளதால்மதுரை யென்றும், (ஸர்ப்பபடம்போல்) அகண்டும் நீண்டுமிருப்ப தால் போகவதியென்றும், தீனரக்ஷகமாகையால் அவந்தீ யென்றும், வெகு நகரசமஷ்டியாய்ப் பிரகாசிக்கிறபடியால் விஜயை யென்றும், விளங்குகிற யதார்த்தமான பொரு ளுள்ளதாகையால் விசாலா, கல்யாணீ முதலிய பட்டணப் பெயர்களால், வியவகரிக்கத் தகுதியாய் விளங்குகின்றது. பகவதியினுடைய திருஷ்டி விசேஷங்களான விசாலாதி கள், ஸம்க்ஷோபம் முதலான எட்டுவித கர்மங்களுக்கும் ஸாதனங்களென்றும் அந்தர்விகாஸாதி ரூபங்களென்றும் அறியத்தகுந்தவை.

இவைகளில், லலிதாரூபமான மதுர திருஷ்டியினால் சத்ருஜனமனோவச்யஞ் செய்ததால் மதுரையென ஏற்பட்டது. மேலும் **क्िमपि मधुरा** (கிமபி மதுரா) என்று அநிர்வாச்யமான பெருமையுள்ள மதுரையென்றும் புகழப் படுகிறது.

(2) ஹாலாஸ்யநாதரின் பெருமை.

हालास्येशितुरीशितुर्यदि सखे लीलासु शुश्रूषसे
तत्सर्वागमगुप्तमस्य यदि वा तत्त्वं विजिज्ञाससे ।
पारं वाथ दिदृक्षसे यदि परं काव्यागमस्रोतसां
तत्कर्णे कुरु नीलकण्ठमखिनो वाचं शिवैकाश्रयाम् ॥

ஹாலாஸ்யேஸிதுரீஸிதுர்யதி ஸகே லீலாஸு ஸுஶ்ரூஷஸே தத்ஸர்வாகமகுப்தமஸ்ய யதி வா தத்வம் விஜிஜ்ஞாஸஸே ॥ பாரம் வாத திதூக்ஷஸே யதி பரம் காவ்யாகமஸ்ரோதஸாம் தத்கர்ணே குரு நீலகண்டமகி னோ வாசம் ஸிவைகாஶ்ரயாம் ॥

தோழனே ! உலகத்திற்கே நாதராயினும், பக்தர்களின் பாக்கியத்தால், ஹாலாஸ்ய மென்னும் மதுரைக்கு, நாதராய் விளங்கும் பரமேசுவரருடைய, திருவிளையாடல்களைக் கேட்க விரும்பினாலும், அல்லது ஸமஸ்த வேதாகமங்களின், உட்பொருளான அப்பரமேசுவரரின் தத்வத்தைத் தெரிந்துகொள்ள விரும்பினாலும், அல்லது காவ்யாம்ருதப் பிரவாஹங்களின் மேற்பட்ட கரையைப் பார்க்க விரும்பினாலும், பரமசிவனையே முக்கிய ஆசிரயமாகக்கொண்ட, ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரின் வாக்கைச் செவியாரக் கேள்.

என்று தாமே பரமபக்தியால், ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதர் ஹாலாஸ்யநாதரின் லீலையைப் புகழ்ந்து வர்ணிக்கிறார். (हालास्य ஹாலாஸ்ய) என்ற பதத்தால், விஷத்தைப் புசித்தவர் என்று பொருள் வெளியாகிறது. இப்பெயருள்ள பரமேச்வரருடைய க்ஷேத்திரமாகிய இம்மதுரைக்கு ஹாலாஸ்யம் என்றே பெயர் வழங்கலாயிற்று. ஜீர்ணமாயிருந்து கதம்பவனம் என்று சொல்லப்பட்டுவந்த இந்த க்ஷேத்திரத்தை குலசேகர பாண்டியன் ராஜதானியாய்ப் புதிப்பிக்கும்போது, हालास्यम् (ஹாலாஸ்யம்)ஸர்ப்பத்தால் எல்லை காட்டப்பட்டு நிர்மாணஞ் செய்தான். ஆகையாலும் ஹாலாஸ்யம் என்று மற்றொரு திருநாமமுமேற்பட்டது.

ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதரவர்கள் சுந்தரேசர் என்ற திருநாமத்தைப் புகழ்கிறார்.

भुवि सुन्दरमास्पदं तवैतत् शिवलिङ्गं तु ततोऽपि सुन्दरं ते।
अपि सुन्दरमेव सुन्दराणामभिधानं वचनामृतं त्वदीयम् ॥

𑌭𑍁𑌵𑌿 𑌸𑍌𑌨𑍍𑌦𑌰𑍍𑌯𑍋𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌂 𑌤𑌦𑌪𑍇𑌵 𑌤𑌸𑍍𑌯 𑌶𑌿𑌵𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌤𑌾
𑌤𑌤𑍋𑌽𑌪𑌿 𑌸𑍌𑌨𑍍𑌦𑌰𑍍𑌯𑌂 𑌤𑍇 । 𑌸𑌰𑍍𑌵𑌿 𑌸𑍌𑌨𑍍𑌦𑌰𑍍𑌯𑍇𑌷𑍁 𑌸𑍌𑌨𑍍𑌦
𑌰𑌾𑌣𑌾𑌮𑍀𑌶𑍍𑌯𑌾𑌨𑌂 𑌵𑌚𑌨𑌾𑌮𑍃𑌤𑌂 𑌭𑌵𑍀𑌯𑌮𑍍 ॥

சுந்தரேசரே! உலகிலுள்ள ஸ்தலங்களில் இந்த ஸ்தலம் சுந்தரமானது; உம்முடைய சிவலிங்கமோ அதைக் காட்டிலும் சுந்தரமானது. சுந்தரங்களுக்கெல்லாம் சுந்தரமான உமது சுந்தரேசரென்ற நாமாவானது வசனமிருதமாய் விளங்குகிறது.

(3) மீனாக்ஷியின் பெருமை.

மேலும் மீனாக்ஷியின் பெருமையை மற்றொரு ஸ்லோகத்தால் ஸ்ரீமத் பகவத்பாதர்கள் புகழ்கிறார்கள்.

तवापर्णे कर्णेजपनयनपैशुन्यचकिता:
निलीयन्ते तोये नियतमनिमेषाश्शफरिका: ।
इयं च श्रीर्बद्धच्छदपुटकवाटं कुवलयं
जहाति प्रत्यूषे निशि च विघटय्य प्रविशति ॥

𑌤𑌵𑌾𑌪𑌰𑍍𑌣𑍇 𑌕𑌰𑍍𑌣𑍇𑌜𑌪𑌨𑌯𑌨𑌪𑍈𑌶𑍁𑌨𑍍𑌯𑌚𑌕𑌿𑌤𑌾𑌃
𑌨𑌿𑌲𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑍋𑌯𑍇 𑌨𑌿𑌯𑌤𑌮𑌨𑌿𑌮𑍇𑌷𑌾𑌶𑍍𑌶𑌫𑌰𑌿𑌕𑌾𑌃 ।
𑌇𑌯𑌂 𑌚 𑌶𑍍𑌰𑍀𑌰𑍍𑌬𑌦𑍍𑌧𑌚𑍍𑌛𑌦𑌪𑍁𑌟𑌕𑌵𑌾𑌟𑌂 𑌕𑍁𑌵𑌲𑌯𑌂
𑌜𑌹𑌾𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌷𑍇 𑌨𑌿𑌶𑌿 𑌚 𑌵𑌿𑌘𑌟𑌯𑍍𑌯 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌤𑌿 ॥

உலகத்தில், நேத்திரத்திற்குச் சமானமாக பெண் மீன்கள், நீலோத்பல புஷ்பம் இவ்விரண்டையும் கூறுவது உண்டு. ஹே மாதாவே! காது வரையில் நீண்டு விளங்கும் கண்கள் உனது திருச்செவிகளில், தங்களைப்பற்றிப் பைசுன்யஞ் செய்துவிடுமோ என்று பயந்து, பெண்மீன்கள்

ஜலத்தில் ஒளிந்து மறைந்தும் அங்கும் கண்டுவிடுமோ வென்று பயந்து, இமைகளைக்கொட்டாமலே இருந்துவருகின்றன. நிச்சயம்! லக்ஷ்மீயானவள், காலையில் குவலயங்களைவிட்டுக் கிளம்பி இதழ்களாகிற கவாடங்களால் அவைகளை மூடி முத்திரை செய்துகொண்டு, நேத்திரங்களையடைகிறாள். மாலையில் மறுபடியும் மலர்கிற (நீலோத்பல) கருநெய்தல்களில் பிரவேசிக்கிறாள்.

லக்ஷ்மீ, பகலில் தேவியின் நேத்திரங்களிலும், இரவில் நெய்தல்களிலும் வாஸம் செய்கிறாள். வேறிடத்தில் வாஸஞ் செய்கிறதேயில்லை என்றும், பெண் மீன்களுக்கு தேவியின் நேத்திர ஸௌந்தரியமில்லாமையால், ஜலமத்தியில் மூழ்கியிருப்பது யுக்தமென்றும் ரஹஸ்யக்கருத்து.

மேலும், அம்பாளுடைய நிமேஷோந்மேஷங்களாலேயே ஸிருஷ்டி முதலானவைகள் உண்டாகின்றன.

निमेषोन्मेषाभ्यां प्रळयमुदयं याति जगती
तवेत्याहुः सन्तो धरणिधरराजन्यतनये ।
त्वदुन्मेषाज्जातं जगदिदमशेषं प्रळयतः
परित्रातुं शङ्के परिहृतनिमेषास्तव दृशः ॥

நிமேஷோந்மேஷாப்⁴யாம் ப்ரளயமுத³யம் யாதி ஜக³தீ
தவேத்யாஹு: ஸந்தோ த⁴ரணித⁴ரராஜந்யதநயே ।
த்வது³ந்மேஷாஜ்ஜாதம் ஜக³தி³த³மஶேஷம் ப்ரளயத:
பரித்ராதும் ஶங்கே பரிஹ்ருதநிமேஷாஸ்தவ த்³ருஶ: ॥

ஹிமகிரியின் புத்திரியே! நீ கண்மூடுவதினால் உலகம் நசிக்கிறதென்றும், நீ கண்திறப்பதினால் ஜகத்தானது உண்டாகிறதென்றும், ஸத்புருஷர்கள் சொல்லுகிறபடி

உனது உன்மேஷத்தால் (கண் திறப்பதினால்) உண்டாயிருக்கிற இந்த உலகத்தை பிரளயத்திலிருந்து ரக்ஷிப்பதற்காகவே, இமைக் கொட்டில்லாமலிருப்பதாக ஊஹிக்கிறேன்.

தேவியின் நிமேஷோன்மேஷங்களால் ஜகதுத்பத்தி ஸ்திதிலயங்கள் உண்டாகிறபடியால் தேவியின் மகிமை வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாதது என்று த்வனிக்கிறது. **सन्त:** (𑌸𑌨𑍍𑌤𑌃) என்றதால் திருஷ்டி சிருஷ்டியாதிகள் சொல்லுகிறார்கள் என்று கருத்து.

பரமேச்வரன், சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களைச் செய்கிறான் என்று கூறும் புராணங்களிலும், நமது பராசக்தியான உமையின் சம்பந்தத்தால் அதுவும் ஏற்படுகிறதென்று புலப்படுகிறது. காளிதாஸரும் **वागर्थाविव संपृक्तौ** (𑌵𑌾𑌗𑌰𑍍𑌥𑌾𑌵𑌿𑌵 𑌸𑌂𑌪𑍃𑌕𑍍𑌤𑍌) என்று நித்யஸம்பந்தமுள்ள சப்தார்த்தங்களைப் பார்வதி பரமேச்வரர்களுக்கு உவமையாக வர்ணித்துள்ளார்.

शब्दजातमशेषं तु धत्ते शर्वस्य वल्लभा ।
अर्थरूपं यदखिलं धत्ते मुग्धेन्दुशेखरः ॥

𑌶𑌬𑍍𑌦𑌜𑌾𑌤𑌮𑌶𑍇𑌷𑌂 𑌤𑍁 𑌧𑌤𑍍𑌤𑍇 𑌶𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌵𑌲𑍍𑌲𑌭𑌾 ।
𑌅𑌰𑍍𑌥𑌰𑍂𑌪𑌂 𑌯𑌦𑌖𑌿𑌲𑌂 𑌧𑌤𑍍𑌤𑍇 𑌮𑍁𑌗𑍍𑌧𑍇𑌨𑍍𑌦𑍁𑌶𑍇𑌖𑌰𑌃 ॥

என்று, பராசக்தியை சப்தரூபமாயும், பரமேச்வரனை அர்த்தரூபமாயும், வாயுபுராணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

மேலும், ஸ்ரீமீனாக்ஷிதேவியின் பெருமையை நீலகண்ட தீக்ஷிதரவர்களும் வர்ணிக்கின்றனர்.

अन्विष्य खिन्नं निगमानशेषानमी न मीनं प्रथमं स्मरामः ।
अन्विष्यमाणं निगमैरशेषैरम्ब स्तुमस्ते वयमक्षिमीनम् ॥

அந்விஷ்ய கி²ந்நம் நிக³மாநஶேஷாநமீ ந மீநம் ப்ரத²மம் ஸ்மராம꞉ । அந்விஷ்யமாணம் நிக³மைரஶேஷைரம்ப³ ஸ்துமஸ்தே வயமக்ஷிமீநம் ॥

உலகத்தில் இரண்டு மீன்கள் உண்டு. அவைகளில் ஒரு மீனானது எல்லா வேதங்களைத் தேடிக் களைத்துள்ளது. அதை முதலில் யாம் ஸ்மரிக்கத் தொடங்கவில்லை. ஆனால் மற்றொரு மீன் ஸமஸ்தவேதங்களாலும் தேடப்படுகிறது. அது யாதெனில், உன்னுடைய நேத்திரமாகிய மீன். அதை நாங்கள் துதிக்கிறோம்.

அதாவது, முன்னொருகாலத்தில் ஸமுத்திரத்தில் மூழ்கியிருந்த வேதங்களை, மஹாவிஷ்ணுவானவர் மத்ஸ்யாவதாரமெடுத்து வெகு கிலேசப்பட்டு, இவ்வுலகில் மறுபடியும் அவ்வேதங்களைக் கொண்டுவந்தார். மீனாக்ஷியின் நேத்திரமாகிற மீனோவெனில் அந்த ஸமஸ்த வேதங்களாலும் தேடப்பட்டுக்கொண்டே வருகிறது.

மற்றொரு பிரகாரமாகவும் மீனாக்ஷி என்ற பதத்திற்குப் பொருள் கூறுகின்றனர்.

अखिलं जगदात्मसम्प्रसूतं परिपुष्णाति दृगेव यत्किलास्याः ।
अभिधामपि मीनलोचनेति व्यदधादिन्द्रपुरोहितस्ततोऽस्याः ॥

அகி²லம் ஜக³தா³த்மஸம்ப்ரஸூதம் பரிபுஷ்ணாதி த்³ருகே³வ யத்கிலாஸ்யா꞉ । அபி⁴தா⁴மபி மீநலோசநேதி வ்யத³தா⁴தி³ந்த்³ரபுரோஹிதஸ்ததோऽஸ்யா꞉ ॥

மீன்கள் தன் குஞ்சுகளைப் பார்வையினாலேயே வளர்க்கும். அது போலவே தன்னால் ஆக்கப்பட்ட எல்லா உலகத்தையும் இந்த பராசக்தியே திருஷ்டியாலே போஷிக்கிறாள். ஆகையால் இந்த பராசக்திக்குப் பெயரிடுங்கால் தேவேந்திரனுடைய குருவானபிரஹஸ்பதியானவர் மீனாக்ஷி என்றே பொருள் வாய்ந்த நாமாவை யிட்டனர்.

(4) பராசக்தியின் பெருமை.

ஸ்ரீபகவத் பாதாவர்களும் பராசக்தியின் பெருமையை அடியில் வருமாறு கூறுகின்றார்:—

तव स्तन्यं मन्ये धरणिधरकन्ये हृदयतः
पयःपारावारं परिवहति सारस्वतमिव ।
दयावत्या दत्तं द्रविडशिशुरास्वाद्य तव यत्
कवीनां प्रौढानामजनि कमनीयः कवयिता ॥

தவ ஸ்தந்யம் மந்யே தரணிதரகந்யே ஹ்ருதயத:
பய:பாராவாரம் பரிவஹதி ஸாரஸ்வதமிவ ।
தயாவத்யா தத்தம் த்ரவிடசிசுராஸ்வாத்ய தவ யத்
கவீநாம் ப்ரௌடாநாமஜநி கமநீய: கவயிதா ॥

நமது ஆசார்ய ஸ்மாமிகள் அவர்கள், பிரும்மபுரமென்கிற சீர்காழியில், அம்பாளின் ஸ்தன்யபானம் பெற்றுக் கவியான திருஞானசம்பந்த சுவாமிகளின் பெருமையைப் புகழ்கிறார்.

ஹிமவானின் கன்னிகையே! உனது ஸ்தன்யத்தை ஹிருதயத்தினின்றும், ஸரஸ்வதியினது ஸம்பந்தமான க்ஷீர ப்ரவாகம் பெருகுகிற தென்றே எண்ணுகிறேன். கருணைமிகுந்த தம்மால் கொடுக்கப்பட்ட யாதொரு க்ஷீர

த்தைத் தமிழ்நாட்டுக் குழந்தையானது, பருகி மிக்கப் பிரௌடர்களான கவிகளுக்குள்ளும் பெருமை வாய்ந்த கவியாக ஆனானன்றோ!

இந்த சுலோகத்தில் द्राविडशिशुः த்ராவிடசிசு: என்ற பதமானது ஸ்ரீ பகவத்பாதர்களையும் சுட்டிக்காட்டலாம். ஆனாலும், அப் பதமானது திருஞானசம்பந்த சுவாமிகளையும் குறிக்க இடந்தருகிறது. பின்னும், பராசக்தியை துரீயமூர்த்தி என்றும், விசேஷ மகிமை பொருந்தியவளென்றும், ஸகல ஜகத்தும் அவளாலே சுற்றிவைக்கப் படுகிறதென்றும் நிரூபிக்கிறார். அதாவது,

गिरामाहुर्देवीं द्रुहिणगृहिणीमागमविदो
हरेः पत्नीं पद्मां हरसहचरीमद्रितनयाम् ।
तुरीया कापि त्वं दुरधिगमनिस्सीममहिमा
महामाया विश्वं भ्रमयसि परब्रह्ममहिषी ॥

கிராமாஹுர்தேவீம் த்ருஹிணக்ருஹிணீமாகமவிதோ
ஹரே: பத்நீம் பத்மாம் ஹரஸஹசரீமத்ரிதநயாம் ॥
துரீயா காபி த்வம் துரதிகமநிஸ்ஸீமமஹிமா
மஹாமாயா விச்வம் ப்ரமயஸி பரப்ரஹ்மமஹிஷீ ॥

வாக்குக்கு தேவதையான ஸரஸ்வதியைப் பிர்ம்மாவின் மனைவியென்றும், மஹாலக்ஷ்மியை விஷ்ணுவின் பத்னியென்றும், ஹிமவானுடைய கன்னிகையை பரமேச்வானுடைய பார்யையென்றும் ஆகமமறிந்தவர்கள் கூறுகின்றனர். பராசக்தியே! பரப்ருமத்திற்கு பட்டமஹிஷியாய் விளங்குகிறவளும், அறியமுடியா எல்லையில்

லாத மகிமை பொருந்தினவளும், துரீயமூர்த்தியாயும் மஹாமாயா எனப்படுபவளுமான நீ உலகத்தை ஆட்டி வைக்கிறாய்.

பராசக்திக்கு ஏழு இடங்களேற்பட்டிருக்கின்றன.

अयोध्या मधुरा माया काशी काञ्ची ह्यवन्तिका ।
पुरी द्वारवतीचैव सप्तैता मोक्षदायकाः ॥

அயோத்⁴யா மது⁴ரா மாயா காஶீ காஞ்சீ ஹ்யவந்திகா ।
புரீ த்³வாரவதீசைவ ஸப்தைதா மோக்ஷதா³யகா: ॥

என்ற பிரகாரம் அயோத்யை, மதுரை, மாயை என்ற ஹரித்வாரம், காசீ, காஞ்சீ, அவந்தீ என்ற உஜ்ஜயினீ, துவாரவதீ என்ற துவாரகை என்ற நகரங்கள். முறையே பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், காலம், திக்கு என்ற இந்த ரூபங்களாய் அயோத்யை முதலான விடங்களில் அமைந்துள்ளன. (திக்கும் காலமும் ஆகாயத்தில் அந்தர்பாவமடைகின்றன) இவ்விஷயத்தையே ஸௌபாக்கிய சிந்தாமணி என்ற மந்திர சாஸ்திரமானது கூறுகிறது.

अयोध्यादिषु पीठेषु पृथिव्यादिष्वनुक्रमात् ।
बिलान्तेषु च सर्वेषु काशी काञ्ची यतोऽधिके ॥

அயோத்⁴யாதி³ஷு பீடே²ஷு ப்ருதி²வ்யாதி³ஷ்வநுக்ரமாத் ।
பி³லாந்தேஷு ச ஸர்வேஷு காஶீ காஞ்சீ யதோऽதி⁴கே ॥

இந்தக்கிரமத்தில் மதுரை, அப்பு பீடமாகிறது. பராசக்தியின் பெருமையை வர்ணித்துக் கூறுவது ஸாத்யமாகாதது என்று கீழ்க்கண்ட சுலோகத்தால் ஆசார்யஸ்வாமிகள் வெளியிடுகிறார்கள்.

प्रदीपज्वालाभिर्दिवसकरनीराजनविधिः
सुधासूतेश्चन्द्रोपलजललवैरर्घ्यरचना ।
स्वकीयैरम्भोभिः सलिलनिधिसौहित्यकरणं
त्वदीयाभिर्वाग्भिस्तव जननि वाचां स्तुतिरियम् ॥

ப்ரதீபஜ்வாலாபிர்திவஸகரநீராஜநவிதி:
ஸுதாஸூதேச்சந்த்ரோபலஜலலவைரர்க்யரசநா ।
ஸ்வகீயைரம்போபி: ஸலிலநிதிஸௌஹித்யகரணம்
த்வதீயாபிர்வாக்பிஸ்தவ ஜநநி வாசாம் ஸ்துதிரியம் ॥

ஜகத்திற்கெல்லாம் மாதாவான பராசக்தியே! உனது ஸ்வரூபங்களாலேயுள்ள வாக்குகளால் உம்மைத் துதிப்பது எவ்விதமிருக்கிறதென்றால், ப்ரகாசத்திற்கே காரண பூதரான ஸூரிய பகவானுக்கு, தீப ஜ்வாலைகளால் நீராஜனஞ் செய்வது போலும், அமிருதத்தையே பெருகவிடும் சந்திரபகவானுக்கு, சந்திரகாந்தக் கற்களினின்றும் பெருகும் ஜலச்சொட்டுகளால் அர்க்யம் விடுவதுபோலும், ஜலத்திற்கே ஆச்ரய பூதரான சமுத்திர பகவானுக்கு அவரது ஜலத்தாலேயே பூஜிப்பதுபோலும் ஆகிறது.

இவ்வித மகிமைபொருந்திய ஸ்ரீ மீனாக்ஷிதேவியாலும் பகவானான ஸ்ரீ சுந்தரேசராலும் அலங்கரிக்கப்பட்ட மிகவும் உத்தமக்ஷேத்ரமான இந்த மதுராநகரத்தையடைந்து ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசர்களுடைய தரிசனத்தால் ஜன்ம ஸாபல்யத்தை அடையும்படியான நல்ல எண்ணம் ஸகல ஜனங்களுக்கும் உண்டாக வேண்டும் என்று ஸ்ரீ சந்திரமௌளீசுவரரைப் பிரார்த்திக்கிறோம்.

திருஞானசம்பந்தர்

சோழமண்டலத்திலே, பிரும்மபுரம் என்னும் சீர்காழியில் அவதரித்த ஞானசம்பந்தர், மதுரைமா நகரில் க்ஷமணர்களை வென்று, பாண்டியனை அனுக்கிரகித்து, அற்புதங்களான காரியங்களைச் செய்துள்ளார்.

அதாவது, பாண்டியநாட்டிலே, பாண்டியராஜன் தான் பூர்வஜன்மத்தில் செய்த தீவினையால், க்ஷமணர்களுடைய துர்ப்போதனையை மெய்யென்று துணிந்து, சத்திய மார்க்கமாகிய சைவத்தை விட்டு, அவர்களுடைய அசத்திய மார்க்கமாகிய ஆருஹத மதத்திலே பிரவேசித்தான்.

'மன்னனெப்படி, மன்னுயிரப்படி'

என்னும் பழமொழிப்படி, குடிகளும் அவ்வாறாயினர். இவ்வாறு க்ஷமண சமயமே விருத்தியாகியும் அப்பாண்டியனுடைய மனைவியாரும், சோழமகாராஜனுடைய புதல்வியாருமாகிய மங்கையர்க்கரசியார், அவ்வரசனின் மந்திரியாகிய குலச்சிறைநாயனார் என்கிற இருவரும் பூர்வ புண்ணியத்தினாலேயே சைவர்களாகவே யிருந்தார்கள். அவர்கள் சைவசமயாசாரியாராகிய திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் வேதாரண்யத்திலிருப்பதாகக் கேள்வியுற்றார்கள். மந்திரியும் இராணியாரும் தக்கவர்களைக்கொண்டு மதுரைமாநகரம் விஜயம் செய்யும்படி, சுவாமிகளைக் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் அவ்வாறே உடன்பட்டு மதுரை வந்துசேர்ந்தனர். அவர்களை அவ்விருவரும் உபசரித்தார்கள். அரசனுக்கு ஜ்வரத்தால், பீடையதிகமாயிருந்தது. அப்பொழுது மந்திரியினுடையவும், தன்மனைவியாருடை

யவும் வேண்டுகோளால்ஞானசம்பந்த சுவாமிகளையும் க்ஷம ணர்களையும் வரவழைத்து, நீங்கள் என்னுடைய நோயைத் தீருங்கள். தீர்த்தவர் எவரோ, அவரே மேம்பட்டவர் என்று சொல்ல, க்ஷமணர்கள் இடப்பாகத்துநோயை நாங் கள் எங்கள் சமயமந்திரத்தினாலே தீர்ப்போம். அவர் வலப் பாகத்து நோயைத் தீர்க்கக்கடவர் என்றுசொல்லி, இடப் பாகத்தை மயில் தோகையால் தடவினார்கள். அதனாலே வெப்புநோய் வளர, பாண்டியன் பொறுக்க முடியாதவ னாகித் திருஞானசம்பந்த சுவாமிகளைப் பார்த்தான். உட னே சுவாமிகள் அரசனுடைய நோக்கத்தைக் கண்டு திரு நீற்றுப்பதிகத்தைப் பாடியருளினார்.

"மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமைபங்கன் றிருவாலவாயான் றிருநீறே,"

"ஆற்றலடல் விடையேறு மாலவாயான் றிருநீற்றைப்
போற்றிப் புகலிநிலாவு பூசுரன்ஞான சம்பந்தன்
றேற்றித் தென்னனுடலுற்ற தீப்பிணி யாயினதீரச்
சாற்றியபாடல்கள் பத்தும்வல்லவர் நல்லவர் தாமே."

என்று, அரசனுடைய வலப்பாகத்தை விபூதிகொண்டு திருக்கையினாலே தடவியருள, அவ்வலப்பக்கத்துநோய் நீங்கிக்குளிர்ந்தது. இடப்பக்கத்துநோய் முன்னையினும் இருமடங்காயிருந்தது. அப்போது க்ஷமணர்கள் நடுங்கி செருக்கழிந்து தூரத்திலேயே நின்றார்கள். பாண்டியன் க்ஷமணர்களை நோக்கி, க்ஷமணர்களே! நீங்கள் தோற்றுப் போனீர்கள். என்னைவிட்டு அகன்று போய்விடுங்களென்று

சொல்லி சுவாமிகளை நோக்கி, சுவாமிகளே! இடப்பக்கத்து நோயையும் தேவரீரே நீக்கியருளும் என்று வணங்கி பிரார்த்தித்தான். சுவாமிகளும் முன் போலவே, விபூதி கொண்டு இடப்பக்கத்தைத் தடவ, அந்நோய் முழுதும் நீங்கிற்று. அதுகண்ட பாண்டிமாதேவியாரும், குலச்சிறைநாயனாரும் சுவாமிகளின் திருவடிகளில்விழுந்து நமஸ்கரித்துக் களிப்புற்றனர். அரசனும், சுவாமிகளின் பாதங்களில் விழுந்து பரமேசுவரனாகவே நிச்சயித்துத் துதித்தான். பிறகு மறுபடியும் பொறாமைகொண்ட க்ஷமணர்கள் இரு சமயத்தாரும், சமயக்கருத்தை ஏட்டிலே எழுதி அக்கினியில் இடக்கடவோம். எது தகிக்கப்படவில்லையோ அதைப்பற்றிய சமயமே வெற்றிபெற்றதாகக் கொள்கிறோம் என்றார்கள். உடனே அரசனுக்கிணைப்படி வளர்க்கப்பட்ட அக்கினியிலேயே, நமது சுவாமிகள் பரமசிவனே மெய்ப்பொருள் என்று திடமாய்க் கருதி, "போக மார்த்த பூண்முலையாள்" என்னும், எழுதப்பட்ட திருவேட்டைக் கழற்றிப் போட்டனர். பிறகு திருஞானசம்பந்த சுவாமிகள் தாம் அக்கினியிலிட்ட ஏட்டைக் குறித்த நாழிகையிலேயே, ஈனமின்மைகண்டு, யாவரும் வியக்கும்படி எடுத்தார்.

அரசன் ஆச்சரியமடைந்து க்ஷமணர்களை நோக்கி நீங்கள அக்கினியில் ஏட்டைப்போட்டு எடுத்துக்காட்டுங்கள் என்று கூற, அவர்கள்தாங்கள் ஏட்டையிட்டு, எடுக்கச் சென்றபோது, அக்கினி மிக ஜ்வலித்ததைக்கண்டு முடியாமல் நின்றனர். அரசர் ஜலத்தினாலே அக்கினியைத் தணித்துப் பார்க்கும்படி செய்யவே, அங்கே சாம்பலுங் கரியுமின்றி மற்றொன்றுங் காணவில்லை. அப்போது, க்ஷமணர்களிடம், அரசன் வெறுப்படைந்தான். ஆனாலும்

க்ஷமணர்கள், மறுபடியும், சமய உண்மையை எழுதிய ஏட்டை ஓடுகின்ற வைகையாற்றிலே இடுவோம், எதிர்த்துச்செல்லும் ஏடே, மெய்ப்பொருளையுடையது என்கவே, சுவாமிகளும் அப்படியே யென்று ஒப்புக்கொண்டனர். அப்பொழுது குலச்சிறை நாயனார் வாதிலே தோற்றவர்கள் செய்வதுயாது என்க, க்ஷமணர்கள் தோற்றோமாகில் கழுவில்ஏற்றுக என்றார்கள். உடனே அரசன் அநுமதிக்கவே,அச்சமணர்கள்தங்கள் ஏட்டைவைகையில் போடவும், அது விரைந்துகொண்டு கடலை நோக்கி யோடிற்று. அரசனால் வேண்டப்பட்ட, திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும்,

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்க்வே.

முதலான திருப்பாசுரங்களைப்பாடி, ஏட்டில் எழுதி, அத்திருவேட்டைத் தமது திருக்கரத்தினால் வைகைநதியில் இட்டருளினார். அந்தத்திருவேடு, நதியிலே எதிர்த்து ஜலத்தைக் கிழித்துக்கொண்டு, சர்வான்மாக்களுக்கும் இதுவே மெய்ப் பொருள் என்று காட்டிக்கொண்டு சென்றது. பரமசிவனே எல்லாப் பொருளிலும், என்று எழுதிய திருவேட்டிலே 'வேந்தனும் வெல்க' என்று பாடியருளியபடியால், பாண்டியராஜனுடைய கூன் நிமிர்ந்தது. ஏடு எதிர்த்துச் செல்லும்போது, தேவர்கள் எல்லாரும் ஸ்தோத்திரஞ் செய்து, புஷ்பமாரி பெய்தார்கள். பாண்டியர் அற்புதங்கொண்டு நின்றார். க்ஷமணர்கள் எல்லாரும் அஞ்சி பதைபதைத்து தலைகுனிந்து நின்றார்கள். திருஞானசம்பந்த சுவாமிகள் அவ்வேடு தங்கும்பொருட்டு,

வன்னிய மத்தமு மதிபொதி சடையினன்
பொன்னியறிருவடி புதுமலரது கொடு
மன்னிய மறையவர் வழிபட வடியவ
ரின்னிசைப் பாடலரே டகவத் தொருவனே.

என்று, பாடியருளவே, குலச்சிறை நாயனார், சிவாலயத்துக்குப் பக்கத்தில் இருக்கின்ற நீர் நடுவிலேபுகுந்து, அங்கே தங்கிய ஏட்டை எடுத்துச் சிரமேற்கொண்டு பெருமகிழ்ச்சிபொங்க கரையிலேறி திருவேடகத்தில்வீற்றிருக்கும் கடவுளை வணங்கித் துதித்துப் பாண்டியர் முன்னே கொண்டுவந்து சமஸ்தருக்குங்காட்டயாவரும் ஆனந்தித்தார்கள். உடனே அரசன், க்ஷமணர்களைக் கழுவிலே ஏற்றுக என்று கட்டளையிட்டார். கருணைக்கடலாகிய திருஞானசம்பந்த சுவாமிகளும், மஹா பாதகிகளுக்கு அது பிராயச்சித்தமாகும் என்று, அரசனை விலக்காதிருந்தார்.

திருஞானசம்பந்த சுவாமிகள், பாண்டியராஜருக்கு விபூதி கொடுக்க, அவர் சுவாமிகளின் திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்து, எழுந்து விபூதியைவாங்கி அணிந்து நின்றார். அவ்வாறே பாண்டிய நாட்டிலுள்ள ஸமஸ்தரும் விபூதிஅணிந்து கொண்டார்கள். அரசர் சைவராயினமையால், க்ஷமணசமயம்பாழாக, சைவசமயமேதழைத்தோங்கிற்று. இவ்விதம், திருஞானசம்பந்த சுவாமிகளால், சைவசமயந் தழைத்தோங்கப்பெற்ற இம்மதுரையின் பெருமையை யாரால்தான் முற்றிலும் கூறமுடியும்.

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரின் சரிதம்.

திருஞானசம்பந்த ஸ்வாமிகள் மதுரைமாநகரில் விஜயஞ்செய்து, சைவசமயத்தை நிலைநாட்டின பிறகு பாண்டியநாட்டினர் எல்லோரும் ஆஸ்திகர்களாகவே விளங்கினார்கள். உலகில் நல்லவஸ்துக்களுக்குத் தான் அடிக்கடி உபத்திரவங்கள் நேரிடும். ஆனாலும் அவை பகவத் கிருபையால் நீங்கிவிடும். பிறகு நல்லவஸ்துக்கள் நீடித்தகாலம் அழிவில்லாமல் விளங்கும் என்பதற்கு ஐயமில்லை. முக்தி க்ஷேத்திரங்களில் சிறந்ததாகிய இம்மதுரையை நாயன்மார்கள் வர்ணிக்குங்கால், "விடியற்காலையில் வேதியர்கள் வேதங்களை ஓதுவதால் கோழிகள் துயிலைவிட்டு ஜனங்களை எழுப்புவதற்காகக் கூவுதல் பிரயோஜனத்தைத் தரவில்லை" என்று புகழ்ந்திருக்கிறார்கள். சங்கப்புலவர் கட்குப் பலகையை அர்ப்பித்துப் பெருமையை வ்ளர்த்ததும் இம்மதுரையே.

இவ்விதம் வர்ணாசிரமங்கள் தழைத்தோங்கிய இம் மதுரையிலே திருஞானஸம்பந்த ஸ்வாமிகளுக்குப் பிறகு ஒரு சமயம் நாஸ்திக்யம் பரவத் தொடங்குங்கால், ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரவர்கள், திருமலைநாயக்கருக்கு மந்திரியாயமர்ந்து, ஆஸ்திக்யத்தைப் பரவச் செய்பலானார். ஆகையாலவர்களின் வரலாற்றை இங்கு உரைக்கவேண்டிய அவசியமேற்படுகிறது.

இம்மஹான், காஞ்சீ மண்டலத்திலுள்ள விரிஞ்சிபுர க்ஷேத்திரத்தின் அருகாமையிலுள்ள அடயப்பலம் என்ற

கிராமத்தில் அவதரித்த ஜகத்பிரசித்தர்களான ஸ்ரீமான் அப்பயதீக்ஷிதரவர்களின் இளையஸஹோதரரான ஆச்சான் தீக்ஷிதரின் பௌத்திரராவார். இவருடைய பிதா நாராயணதீக்ஷிதர். தாயார் பூமிதேவி யெனப்படுவாள். இவருக்கு நால்வர் ஸஹோதரர்கள். அவர்களாவன:—1. ஆச்சான்தீக்ஷிதர், 2. சின்னப்பய்யதீக்ஷிதர், 3. சந்திரகலாவதம்ஸர், 4. அதிராத்ரயஜ்வா. இவருடைய காலமானது இவராலியற்றப்பட்ட நீலகண்ட விஜயசம்பூவிலுள்ளஒரு ச்லோகத்தால் வெளியாகிறது.

> अष्टात्रिंशदुपस्कृतसप्तशताधिकचतुस्सहस्रेषु ।
> कलिवर्षेषु गतेषु ग्रथितः किल नीलकण्ठविजयोऽयम् ॥
>
> அஷ்டாத்ரிம்ஶதுபஸ்க்ருதஸப்தஶதாதிகசதுஸ்
> ஸஹஸ்ரேஷு । கலிவர்ஷேஷு கதேஷு
> க்ரதித: கில நீலகண்டவிஜயோऽயம் ॥

கலிபிறந்து 4738 வது ஸம்வத்ஸரத்தில் அதாவது கி-பி-1637 இல் இந்த நீலகண்டவிஜயம் இயற்றப்பட்டது.

இம்மஹானால் மற்றும் இயற்றப்பட்ட சிவலீலார்ணவகாவ்யத்தின் ஒன்பதாவது ஸர்க்கத்தில், ஹிமாசலத்தினருகில் தடாதகாதேவியின் (மீனாட்சியின்ஸைன்யங்கள்) தங்கின என்று கூறி, அப்பிரதேசத்தை வர்ணிக்கும்போது, அனுயாஸமாய் வெளிக்கிளப்பின ஸரஸமான ஸாரஸ்வதியால், இவர் பிராமணர் என்றும், ஆசாரஸம்பந்நர் என்றும் வியக்தமாகிறது. அதாவது—

रत्नानि तत्र वणिजो भिषजोऽग्रहीषु-
र्दिव्यौषधीर्गजवरानपि राजकीयाः ।
अस्मादृशाः क्षितिसुराः पुनराहरन्त
भागीरथीतटरुहाणि कुशांकुराणि ॥

ரத்நாநி தத்ர வணிஜோ பிஷஜோऽக்ரஹீஷு:
ர்திவ்யௌஷதீர்கஜவராநபி ராஜகீயா: ।
அஸ்மாத்ருஶா: க்ஷிதிஸுரா: புநராஹரந்த
பாகீரதீதடருஹாணி குஶாங்குராணி ॥

அப்பிராந்தத்திலுள்ள இரத்தினங்களை வியாபாரிகளும், திவ்யமூலிகைகளை வைத்தியர்களும், சிறந்த யானைகளை ராஜபடர்களும், கிரஹித்துக் கொண்டார்கள். நம்மைப் போன்ற பிராமணர்களோவென்றால், கங்கைக்கரையில் முளைத்த குசாங்குரங்களை (நுனி தர்ப்பைகளை) கிரஹித்துக் கொண்டனர் என்று கூறியிருக்கிறார்.

இம்மஹான் ஸ்ரீ கண்டமதத்தின் எல்லா மர்மங்களையும் நன்றாயுணர்ந்தவர். இவருக்கு ஸ்ரீ சைவசித்தாந்தத்தில் மிகுந்த அபிநிவேசம். தானே வைராக்யசதகத்தில் **शैवावयमाचतुर्वदनात्** (ஶைவாவயமாசதுர்வதநாத்) பிரும்மா முதற்கொண்டு நாங்கள் சிவனடியார்கள் என்று கூறியிருக்கிறார். சாந்தி விலாசத்திலும்,

आगर्भादाकुलपरिबृढादाचतुर्वक्त्रतोऽपि
त्वत्पादाब्जप्रपदनपरान्वेत्सि नश्चन्द्रमौळे ।

ஆகர்பாதாகுலபரிப்ருடாதாசதுர்வக்த்ரதோऽபி
த்வத்பாதாப்ஜப்ரபதநபராந்வேத்ஸி நஶ்சந்த்ரமௌளே

கர்ப்பம் முதற்கொண்டும் பிரும்மன் வரையிலும், உம்முடைய பாதாப்ஜத்தையே சரணமாகப் புகுந்த எங்களை சந்திரமௌளியே! நீர் அறிகிறீர் என்றும் கூறியிருக்கிறார்.

இம்மஹானுக்கு, எப்படி மிகுந்த கீர்த்தி வாய்ந்ததோ, அப்படி ஸ்ரீமான் அப்பைய தீக்ஷிதரின் புத்திரர்களுக்கும் ஏற்படவில்லை. இம்மஹானுடைய காலத்தில் சாஸ்திரங்களிலோ, ஸாஹித்யத்திலோ, இவருக்குச் சமமாயோ, மேற்பட்டோ உள்ளவர் ஒருவருமில்லை. சமகாலத்திலுள்ளவர்களில், இவரே சிறந்த கவியாவார். இவருடைய, ஸாஹித்யத்தின் நடையானது, லளிதமான பதச்சேர்க்கையும், விசித்திரமான உல்லேகமும், ரஸம் நிறம்பினதும், தடையில்லாத ஸரஸ்வதியின் பிரவாஹமும் வாய்ந்து, ஆனந்தத்தை யளிக்கக்கூடியது. இவரது ஸாஹித்யம் சப்த சித்திரங்களிலோ, யமகங்களிலோ, தன் மனதையும் பிறர் மனதையும் புண்ணாக்காமல், பரமானந்தத்தைப் பெருகவிடும்.

ஸ்ரீ ராமபத்ர தீக்ஷிதரவர்கள், சிருங்கார திலக பாணத்தில்,

नीलकण्ठमखिनां सदसि सकृत्प्रविष्टस्यापि समुज्जृम्भते सरसपदसन्दर्भवैदग्धी ।

நீலகண்ட2மகி2நாம் ஸத3ஸி ஸக்ருத்ப்ரவிஷ்டஸ்யாபி ஸமுஜ்ஜ்ரும்ப4தே ஸரஸபத3ஸந்த3ர்ப4வைத3க்3தீ4 ।

'ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரவர்களின் ஸபையில், ஒரு தடவை பிரவேசித்தவருக்கும் ஸரஸபதங்களின் ஸந்தர்பத்தாலமைந்த வாக்கின் சிறப்பானது பொங்குகிறது' என்று,

பிரசித்தமாய்ச் சொல்கிருர். இவரால் இயற்றப்பட்ட சிறு காவ்யங்களாவன. 1 கலிவிடம்பனம், 2 ஸபாரஞ்சனம், 3 அன்யாபதேச சதகம், 4 சாந்திவிலாசம், 5 வைராக்ய சதகம், 6 ஆனந்தசாகரஸ்தவம்.

இவரது மஹாகாவ்யங்களில், ஹாலாஸ்யநாதரின் 64 லீலேகளே வர்ணித்து, பரமேசுவரின் மேன்மையைச் சிறப்பிக்கும் சிவலீலார்ணவம் ஒன்று. இது 22 ஸர்க்கமுள்ளது. இரண்டாவது கங்காவதரணம், இதுவும் கங்கை பகீரதனுல், பூமியில்வந்த வரலாற்றைக் கூறுவதுடன், பரமேசுவரனுடைய பாரம்யத்தைச் சிறப்பிக்கிறது. இது 8 ஸர்க்கமுள்ளது. கத்திய, பத்தியாத்மகமான நீலகண்டவிஜயம் என்ற சம்பூகாவ்யமும் இவரால் இயற்றப்பட்டிருக்கிறது. அதுவும், ஹாலாஹலவிஷத்தை உட்கொண்டு ஸமஸ்த உலகங்களேயும் ரக்ஷித்த சிவபெருமானது உத்கர்ஷத்தை அறிவிக்கிறது. நீலகண்ட விஜயத்தைப் போல் மற்ற காவ்யங்களில் இக்கவி, தன் காலத்தைக் குறிப்பிடவில்லே. ஆனுலும், மற்ற காவ்யங்கள், அப்பைய தீக்ஷிதரவர்கள் விண்ணுலகஞ்சென்ற பிறகுதான், ஆக்கப்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது.

कालेन शम्भुः किल तावतापि कलाश्चतुष्षष्टिमिताः प्राणिन्ये ।
द्वासप्ततिं प्राप्य समाः प्रबन्धान् शतं व्यधादप्पयदीक्षितेन्द्रः ॥

𑌕𑌾𑌲𑍇𑌨 𑌶𑌂𑌭𑍁𑌃 𑌕𑌿𑌲 𑌤𑌾𑌵𑌤𑌾𑌪𑌿 𑌕𑌲𑌾𑌶𑍍𑌚𑌤𑍁𑌃
𑌷𑌷𑍍𑌟𑌿𑌮𑌿𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑍍𑌯𑍇 । 𑌦𑍍𑌵𑌾𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯
𑌸𑌮𑌾𑌃 𑌪𑍍𑌰𑌬𑌨𑍍𑌧𑌾𑌨𑍍 𑌶𑌤𑌂 𑌵𑍍𑌯𑌧𑌾𑌦𑌪𑍍𑌪𑌯𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃॥

என்று, சிவலீலார்ணவ சுலோகத்தை விமர்சிக்கும்போது இக்கருத்து வெளியாகிறது.

பரமேசுவரன் அறுதியான அவ்வளவு காலத்திலும் 64 கலைகளைத்தான் இயற்றினார். *தீக்ஷிதரோ ஸ்வல்பமான 72 வயதேயிருந்து நூறு நூல்களை இயற்றினார். என்ற பூத (இறந்த) காலமானது மேற்கூறிய கருத்துக்குப் பொருந்தியுள்ளது. 100 என்பது உபலக்ஷணம்; சிலர் 104 என்றும், 108 என்றும் கூறுகிறார்கள். ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் ஆனந்தஸாகர ஸ்தவத்தில்,

त्वय्यर्पितं प्रथममप्पययज्वनैव स्वात्मार्पणं विदधता स्वकुलं समस्तम् ।
का त्वं महेशि कुलदासमुपेक्षितुं मां कोवानुपासितुमहं कुलदेवतां त्वां॥

த்வய்யர்பிதம் ப்ரதமமப்பய்யயஜ்வநைவ
ஸ்வாத்மார்ப்பணம் விதததா ஸ்வகுலம் ஸமஸ்தம் ।
கா த்வம் மஹேசி குலதாஸமுபேக்ஷிதும் மாம்
கோ வாநுபாஸிதுமஹம் குலதேவதாம் த்வாம் ॥

பரமேசுவரியே ! ஆத்மார்ப்பணத்தை இயற்றின அப்பைய தீக்ஷிதராலே ஸமஸ்தமான தன் குலமும் உன்னிடத்தில் முன்னமேயே அர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறிருக்க, குலதாஸனான என்னை யுபேக்ஷிக்க நீ எப்படிவல்லவளாவாய். குலதேவதையான உன்னைநான்தான் உபாஸிக்காமலிருக்க எவ்வாறுமுடியும் என்று கூறுகிறார்.

---

* இந்த அப்பய்யதீக்ஷிதரவர்கள (Velur) வேலூர் நகராதிபதியும், சின்னவீரப்பநாயகரின்புத்திரனும், லிங்கமநாயகனுக்குத் தகப்பனுமான, சின்னபொம்மராஜனால் மிகவும் ஸம்மானங்களால் ஸம்மானிக்கப்பட்டவர்கள். சின்னபொம்மராஜனுடைய வேண்டுகோளால், சதாசிவமஹாராஜனாலும், ஸ்ரீரங்க மஹாராயராலும் கொடுக்கப்பட்டதான சாஸனபத்திரங்கள் எழு (Velur) வேலூர் ஜ்வரகண்டேச்வராலயத்தில் கல்லில் செதுக்கப்பட்டுத் தற்காலத்திலும் காணப்படுகின்றன. சாஸனங்கள் ஏற்பட்ட வருஷமாவது— சாலிவாகனம் 1488–1497 (கி. பி. 1566–1575)

त्वय्यर्पितं प्रथममप्पययज्वनैव ।

ஃவய்யர்பிதம் ப்ரதமமப்பயயஜ்வனைவ

என்றதால் இந்நூல் இயற்றப்படும்போது அப்பைய தீக்ஷிதர் மேலுலகம் சென்றதாகத் தெரிகிறது.

மற்றும், சாஸ்திரங்களிலோ, ஸாஹித்யத்திலோ இம்மஹான் நீலகண்ட தீக்ஷிதரால் அனேக நூல்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. அவைகளில் 1 நளசரித நாடகம் 2 கையட வியாக்யானம் 3சிவதத்வரகஸ்யம் 4சிவோத்கர்ஷமஞ்ஜரீ, இவைகள் தான் தெரிகின்றன. இம்மஹானுடைய 3-வது குமாரரான கீர்வாணேந்திரர் தம்மாலாக்கப்பட்ட சிருங்காரதிலகபாணத்திலும், இம்மஹானுடைய ஸகோதரரான, அதிராத்ரயஜ்வாவால் தமது 'குசகுமுத்வதீயம்' என்ற நாடகத்திலும், இந்நூல்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இம்மஹான் மதுரைமாநகரில் அரசாண்ட திருமலை நாயக்கமஹாராஜனுடைய ஸபையில்,பண்டிதமணியாயும், மந்திரித்தலைவராயும் இருந்தார். இவருக்கு அய்யா தீக்ஷிதரென்றும், வியவகாரமுண்டு. நம் நாட்டினர், பிதாமஹரின் பெயராலேயே பௌத்திரனைக் கூப்பிடுவது வெகுவாய் வழக்கம். அதிலும் பெரியோரின் பெயரை நேராகச்சொல்வது மரியாதையல்லவென்று கொஞ்சம்மாற்றிச் சொல்வது வழக்கம். இத்தகைய காரணத்தால் தீக்ஷிதர் வம்சத்தில் இவ்விதமான நாமக்ரமமானது ஏற்பட்டது.

முதலில் ஆச்சார்ய தீக்ஷிதர், அவரது பௌத்திரர் ஆச்சான் தீக்ஷிதர். அவரது பௌத்திரர் அய்யா தீக்ஷிதர். திருமலை நாயகரும் தீக்ஷிதரின் அபிப்பிராயத்திற் கிணங்

கியே, ஹாலாஸ்யநாதருக்கு ஸமஸ்த உத்ஸவத்தையும் நடத்தினர். தீக்ஷிதரும் சாஸ்திரங்களை நன்கு ஆராய்ச்சி செய்து, அதன் படியே ஸமஸ்த உத்ஸவங்களையும் நடத்தி வைத்தார். தவிரவும், ஹாலாஸ்யநாதருடைய லீலைகளை, சிவலீலார்ணவம் என்ற காவ்யத்தால் அவ்வாறே, வெளியிட்டிருக்கிறார். இப்போதும் அவ்விதமே உத்ஸவங்கள் நடைபெற்றுவருகின்றன.

திருமலைநாயக்கர் கி. பி. 1628வது மேமீ அக்ஷயவது வைகாசி மாதம் 10உ பூர்வபக்ஷத்தில் முகூர்த்தம் வைத்து, மண்டபம் கட்டுவதற்கு ஆரம்பித்தார். அழகிய அப்புதுமண்டபத்தை முடித்த ஆசாரியின் பெயர் சுமந்திரமூர்த்தி ஆசாரி. இந்த ஆசாரி சிற்பசாஸ்திரத்தில் அதிநிபுணன். மிகுந்த சிவபக்திஉடையவன். அவன் முதலில் ஒரு பெரிய தூணில் ஏகபாதமூர்த்தி சொரூபம் வகுத்து, அதை ஸ்தாபனம் பண்ண ஒரு நல்லதினம் வைத்திருந்தான். அவ்வுருவத்தை இப்பொழுது புது மண்டபத்தின் கிழக்கு வரிசையில்,தெற்குக்கோடிக்காலில் பார்க்கலாம். ஏகபாதமூர்த்தி யென்பது "ஒருகாலுடன் பரமசிவனிருக்க அவரிடத்தில், பிர்மா ஒரு புறமும், விஷ்ணு ஒரு புறமுமுண்டானர்கள்' என்று தெரிவிக்கும் ஒரு முகூர்த்தம். அவ்வுருவத்தை வைணவர்கள் கண்டு, அதனால் காத்தற்கடவுளாகிய விஷ்ணுவுக்குப்பாத்துவங்குறையும் என்றெண்ணி 'அக்காலை நாட்டக்கூடாது' என்று ஆக்ஷேபித்து நாயக்கரிடம் கேட்டுக்கொண்டார்கள்.

நாயக்கர் கேட்டு, இவ்வியவகாரத்தை முடிவுசெய்து கொண்டே அக்காலை நடவேண்டுமென நிறுத்திவைத்தார். சைவர்களுக்கு மகாசீலரும், நான்குவேதம், ஆறு சாஸ்தி

ரங்களில் அதிநிபுண பண்டிதரும் சிவபூஜா துரந்தரருமான நீலகண்ட தீக்ஷிதரை வாதாடும்படி நியமித்தார். வைணவர்களுக்காக அவ்வாறே வேதசாஸ்திர நிபுண பண்டிதரும் வைணவபூஜா துரந்தரருமாகிய அய்யா தீக்ஷிதரை நியமித்தார். வாதம் ஆறுமாதகாலம் நடந்தது. ஒருவருக்கொருவர் வெற்றி தோல்வி என்று நிச்சயிப்பதற்கிடமில்லாமலே இருந்தது. இருவரும் தத்தமக்குரிய ஆதாரங்களை எடுத்துக்காட்டிச் சாதித்தனர். ஆயினும் முடிவில் இவருள் நீலகண்ட தீக்ஷிதரே இதற்கு வேண்டிய பிரமாணங்களைக்காட்டி நிரூபித்து, அம்மூர்த்தியுண்டெனத் தாபித்தார்" என்று டெயிலர் பாதிரியார், பதிப்பித்துள்ள கையெழுத்துப் பிரதியிலும், நெல்ஸன் துரையவர்கள் மானுவலிலும், கண்டிருக்கிறது. இந்தவாதத்தைக்கேட்டுத் தெளிந்த திருமலை நாயக்கர் உலகமுழுதும் பரவிவருகின்ற பலவேறு சமயங்கள் தோறும் நாமபேத மொன்றன்றி வஸ்துபேதமன்று, என்பது யாவரும் நண்குணர்ந்து எம்மதத்திலும் சம்மதப்பட்டுள்ளோமாயினும் முறைப்படி யாம் அரசாண்டு வருகிற இம்மதுரையம்பதி புண்யம்பெற்ற சிவக்ஷேத்திரங்களில் தலைசிறந்த ஒன்றாதலாலும், யாம் ஒரு வைணவனாய்ப் பிறந்துளோமாயினும், இப்பதியின்கண் எழுந்தருளியிருக்கிற சோமசுந்தரக்கடவுளே, கனவில் எமக்குத் தரிசனந்தந்து விபூதி யளித்து, எமதுபிணியைத் தீர்த்துளாராதலாலும், இங்கு எடுத்துக்கொண்ட இத்திருப்பணி சிவாலயத் திருப்பணியே யாதலாலும் இங்கு இந்த ஏகபாதமூர்த்தி சொரூபத்தை ஸ்தாபனம் பண்ணவேண்டியது கடமைதான் எனத் தீர்மானித்தார். பின்னர், அதன்படியே அம்மூர்த்தி சொரூபம் நாட்டப்பெற்றது. அதன் பிறகு வேலைகள் மிகத்துரிதமாய் நடந்

தன. கி.பி. 1635ஆம் ஆண்டு ஸ்ரீமுகஆம் வைகாசியில் கட்டி முடிவு பெற்றது; அக்கட்டிடத்தின் சிறப்பை இங்கு எடுத்துக்கூற ஸாத்யமாகாது. பார்த்தவர்களுக்குத்தான் அதன் மேன்மை விளங்கும். அம்மண்டபம் 105 அடி நீளமும் 33 கஜ அகலமும் உள்ளது. அம்மண்டபத்தில் 124 கால்கள் விடப்பட்டுக்கல்லால் மேல்தளமும் மூடப்பெற்றிருக்கிறது. இரண்டு இளவரிசைக் கால்களில் நாயக்கருடையவும், அவர் முன்னோர் ஒன்பதின்மருடையவும் உருவச்சிலைகள் செய்யப்பெற்றுள்ளன.

நாயக்கருடைய உருவச்சிலையின் கால் அடிக்கும் பொழுது அதில் அவருடைய பத்தினிமாரிற் சிலருடைய உருவச்சிலையும் சேர்த்தமைத்தனர். அவருடைய பட்டமகிஷியாரின் உருவத்தைச் செதுக்கும்பொழுது சுமந்திர மூர்த்தியாசாரி எவ்வளவோ சமர்த்தனயிருந்துங்கூட அவனையறியாது, அவ் வம்மையாரது பெருந்தொடையில் ஒருசல்லி தெறித்துவிழுந்து ஊனமுண்டாயிற்று. ஆசாரி மிகவும் வருத்தமுற்று, அவ் வுருவத்தை இரண்டாமுறை அவன் எவ்வளவோகவனம்வைத்து அடித்தும், அது அப்படியே விழக்கண்டு, அதனை அதுசமயம் அங்குவந்திருந்த நீலகண்டதீக்ஷிதருக்குத் தெரிவித்தான். அவர் "அது அப்படித்தான் இருக்கும். நீ அதை அப்படியே விட்டுவிடுக" என்று கூறினர். அவன் அவ்வாறே விட்டுவிட்டான். நாயக்கர் மறுநாள் அவ் வுருவைப் பார்க்கும்பொழுது, "அஃதேன் அப்படி ஊனமாயிருக்கின்றது" எனக்கேட்க, சுமந்திர ஆசாரி, நடந்த விருத்தாந்தத்தையும், நீலகண்டதீக்ஷிதர் உத்தரவையும்கூறினன். நாயக்கருக்கு உடனே தீக்ஷிதரிடத்திற் சந்தேகமுண்டாயிற்று. தமது பத்தினியாருடைய பெருந்தொடையிலிருக்கும் தழும்பை இவரெவ்

வாறு உணர்ந்தாரென அவர் நடத்தை விஷயத்தில் அநியாயமாய்ச் சந்தேகப்பட்டு, 'அவர் கண்ணைப்பிடுங்கிவிடவேண்டு' மெனத் தீர்மானித்து, அவரை உடனே அழைத்து வரும்படி உத்தரவளித்தனர். தீக்ஷிதர் அவ்வமயம் பூஜையிலிருந்தார். உத்தரவு போகுமுன் அவர் திருவருளால் உணர்த்தப்பட்டு, பூஜையிற்செய்த கற்பூரஹாரத்தியை அப்படியே தமதிருகண்ணிலும் வைத்துக் கொளுத்திக்கொண்டு, வந்தவனிடம் "மகாராஜா எண்ணிய காரியம் ஆய்விட்டது" எனக்கூறும்படி சொல்லியனுப்பினர். அவன் போய்ச்சொல்லவும், நாயக்கர் உடனே புறப்பட்டு தீக்ஷிதர் வீட்டிற்கு வந்து, அவரைப் பார்க்கும்போது அவர் இரண்டுகண்ணும் அவிந்திருந்தது. நாயக்கர் 'அபசாரம் செய்தோமே' என்றெண்ணி ஆறுக்கவலையடைந்தார். தீக்ஷிதர் "நான் சத்தியவானாயின் எனக்கு மீனாக்ஷியம்மையார் கண்ணைக் கொடுத்தருளுவார்" எனச்சொல்லி, அம்மையாரை வேண்டி "ஆனந்த சாகரஸ்தவம்" என்ற நூலை வடமொழியிற்பாட, அம்மையார் திருவருளால் அவருக்கு அவிந்த கண்கள் மீண்டும் ஒளிபெற்று, முன்போற் பார்வைக்கு உபயோகமாயின. இதுகண்ட மன்னர் களிப்படைந்தார்.

அந்த ஆனந்தசாகரஸ்தவம் 108சுலோகங்களுள்ளது. அவைகளில் 61-வதுசுலோகம் சொல்லி முடிவுபெற்றதும், தீக்ஷிதரின் இருகண்களும் பிரகாசித்தன. அதாவது

अव्याजसुन्दरमनुत्तममप्रमेयमप्राकृतं परममङ्गळमंघ्रिपद्मम् ।
सन्दर्शयेदपि सकृद्भवती दयार्द्रा द्रष्टास्मि केन तदहं तु विलोचनेन॥

அவ்யாஜஸுந்தரமநந்யஸமப்ரமேயம் அப்ராக்ருதம்
பரமமங்கலமங்க்ரிபத்மம் ஸந்தர்ஶயேதபி ஸக்ருத்பவதீ
தயார்த்ரா த்ருஷ்டாஸி கேந ததஹம் ததா விலோசநேந ॥

'மீனாக்ஷியே! அவ்யாஜ சுந்தரமும், ஒப்பற்றதும், அப்ரமேயமும், அப்பிராகிருதமும், பரமமங்களஸ்வரூபமுமான உம்முடைய பாதகமலத்தை தயைகூர்ந்து, ஒருதடவை தாம் எனக்கு விளக்கிக் காண்பித்தாலும், எந்தக்கண்ணுல் நான் அப் பாதகமலத்தைப் பார்ப்பேன் என்றதும், கண்கள் பிரகாசித்தன. மறுபடியும் அவர்கள் அம்பாளின் பாதங்களையே பலசுலோகங்களால்வர்ணித்து, மேன்மேல் மற்ற உருவங்களையும் வர்ணித்து 107-வது சுலோகத்தில் தீக்ஷிதர்

अम्ब स्मरेयमपि ते चरणारविन्दमानन्दलक्षणमपास्तसमस्तभेदम् ।

அம்ப ஸ்மரேயமபி தே சரணாரவிந்த
மாநந்தலக்ஷணமபாஸ்தஸமஸ்தபேதம் ॥

என்று முடித்தார்.

இப்போதும், நேத்திரரோகமோ, மற்ற எப்பிணியோ நேர்ந்தாலும், ஆநந்த சாகரஸ்தவத்தை, நாள்தோறும் பாராயணம் செய்து, அனேகர் பலஸித்திபெற்று, ரோக மற்றவராயிருந்து வருகின்றனர்.

இந்த மஹானுன நீலகண்ட தீக்ஷிதர், திருமலைநாயக்கரால் வேண்டிக்கொள்ளப்பட்டும், மந்திரிபதவியில் விருப்பமில்லாதவராய், தாம்பிரபர்ணி தீரத்தில் மீதியான வாழ்நாளைக் கடத்த உறுதிகொண்டார். அப்போது நாயக்கர் அம் மஹான் திருவடிகளில் விழுந்து, பிரார்த்தித்தபோது

ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேச்வரர்களுக்கு வேண்டிய திருப்பணியும் உத்ஸவாதிகளும் எமதிஷ்டப்படியே நீர் நடத்திவருவதால், உமக்குக் குறைவு கிடையாது. பரமேச்வரரின் கிருபை உமக்குக் கிடைக்கும். ஆனாலும் உமது பிறந்த நாள் தைப்பூசமானதால், அன்றையதினம தெப்பக்குளத்தில் மையமண்டபத்திற்குத் தெப்பங்கட்டி, அதில் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேச்வரரை யெழுந்தருளச்செய்து திருவிழாக் கொண்டாடும்படி ஸ்திரமான ஏற்பாடுசெய் என்று அனுக்கிரகித்தார். அவராக்ஞைப்படி இதுகாறும் தைபபுஷ்யத்தில் அவ் வுதஸவம் நடைபெற்றுவருகிறது. அக்குளம் தெற்குவடக்கில் 1000 அடி நீளமும், கிழக்குமேற்கில் 950 அடி அகலமும் உள்ளது. அதன் அழகைப்பற்றிவர்ணிக்க இயலாது.

இம் மஹானுக்கு இவ்வளவு மிகுந்த கீர்த்தி வாய்ந்ததற்கு ஒரு காரணம் சொல்வதுண்டு. அதாவது:—" ஒரு சமயம் இவரது பால்யத்திலேயே, தாயவிபாகம நேர்ந்தபோது அப்பய்ய தீக்ஷிதரவர்கள், குழந்தாய்! உனக்கு எவ்விதமாய் பாகித்துத் (பிரித்து) தரவேண்டுமென்று வினவ, உடனே அவர் தங்களது கிருபையே போதுமானது என்றார். அதனால் அவர்கள் சந்தோஷித்து ஓலைப் புஸ்தகங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட ரகுவம்சம், தேவீமாஹாத்மியம் இவ்விரண்டையும் தந்து, பாண்டிய நாட்டிற்குப் போகும்படி அநுக்கிரஹித்தனர். உடனே அவர்கள் அவ்வாறே சென்று, மதுரை மீனாக்ஷி ஸந்நிதியில் தேவீமாஹாத்மய பாராயணஞ் செய்துகொண்டிருந்தபோது, அம்பாளை தர்சிக்கவந்த திருமலைநாயக்கர் கண்டு, சம்பாஷித்து, அவரதுபாண்டித்தியத்தையறிந்து தமக்கு

முக்கிய மந்திரியா யமர்த்திக்கொண்டனர். பிறகு சிறிது காலஞ்சென்று அப்பய்யதீக்ஷிதரவர்கள் பாண்டியநாட்டில் வந்து அவரைக்கண்டு சந்தோஷித்தனர்.

ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதரவர்கள், தாம்பரபர்ணி தீரத்தில் பாலாமடை என்னும் கிராமத்தில், கோழியின் த்வனி கூடகேட்காதவண்ணம் ஒதுக்குப்புறமாய், நீலகண்டஸமுத்திரம்என்ற அக்கிரஹாரத்தை நிர்மாணித்து, வேதாகமங்கள் முதலான வித்தைகள் கற்று, அதன்படி கர்மாக்களை விதிப்படி நடத்திவரும் வேதியர்களோடு வாழ்நாள் கடத்தினர். இப்போதும் அருவங்குளம் முதலான கிராமங்களில் அவ் வம்சத்தினர் இருக்கின்றனர். இவ்விதமான மஹான்களின் புண்ணியசரித்திரத்தால் நமது பண்டைய வித்வான்களின்கீர்த்தி ஒப்பற்றது என்றது நன்குவிளங்குகின்றது.

ஸ்ரீ சங்கர பகவத்பாதாள்.

गामाक्रम्य पदेऽधिकाञ्चिनिविडस्कन्धैश्चतुर्भिस्तथा
व्यावृण्वन्भुवनान्तरं परिहरंस्तापं समोहज्वरम् ।
यश्शाखी द्विजसंस्तुतः फलति तत्स्वाद्यं रसाख्यं फलं
तस्मै शङ्करपादपाय महते तन्म त्रिसन्ध्यं नमः ॥

உலகத்தில் தேமாமரம் முதலிய பயன்தரும் விருக்ஷங்கள் சுவையுள்ள பழங்களையண்டினவர்களுக்கு அளித்து, பரமாநந்தத்தையுண்டாக்குகின்றன. அவைகள் ஸாரக்ஷேத்திரங்களில் நன்ருய் வேரூன்றி, அடர்ந்த கிளைகளால் நான்கு பக்கங்களிலும் பரவி, சூரியவெப்பத்தால் பரிதபித்து வருகின்ற பிரயாணிகளுக்கு ஏற்படும் தாபத்

தைத்தன் குளிர்ந்த நிழலால் போக்கடிக்கின்றன. மேலும் பற்பல சிறிய கிளைகளடர்ந்தோங்கி ஆகாயமளாவிப்பறவைகளுக்குத்தக்கவஸதிகளைத் தந்து, அவைகளால்கொண்டாடப்பட்டு இனிய கனிகளையளித்து பரமோபகாரிகளாய் விளங்குகின்றன. அதுபோல் ஸ்ரீ சங்கர பகவத்பாதாளாகிற மஹாவிருக்ஷமானது, ஸ்ரீ காஞ்சியென்னும் மஹாக்ஷேத்திரத்தில் வேரூன்றித்தனது பத்மபாதர் முதலான நான்கு முக்கிய சிஷ்யர்களால் பூலோகமெங்கும் வியாபித்து, வேறுலோகங்களிலும் பரவி, மாயையென்னும் உபாதியாலாகிய, ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்னும் தாபத்ரயத்தைத் தன்னையண்டினவர்களுக்குப் போக்கடிக்கின்றது. மேலும், வேதசாகைகளாகிற கிளைகளடர்ந்தோங்கி வேதியர்களாகிற பக்ஷிகளால் ஆனந்தித்துத் துதிக்கப்பெற்று ஆனந்தமயமான ரஸமென்றே பெயர்வாய்ந்த பேரானந்தக்கனியை பலிக்கச் செய்கின்றது. அவ்வாறு பரவச்செய்து அண்டினவர்களுக்குப் பேரானந்தத்தைப் பயக்கும் பரமாச்சாரியாளுக்கு எக்காலத்தும் நாம் வந்தனமளிக்கிறோம்.

ஸ்ரீ சங்கரபகவத்பாதாள் வரலாறு.

இவ்வுலகில் கலியின் கொடுமையால், வர்ணாசிரமதர்மங்கள் குன்றி, துர்மதங்கள் வியாபித்து, வைதிகமார்க்கம் என்று ஒன்று உளதோ என்று சங்கிக்கும்படியான நிலைமை ஏற்பட்டபோது, அதனை ஸகல தேவர்களும்ஒருங்குசேர்ந்து ஸ்ரீ கைலாஸவாஸியான ஸ்ரீ சங்கரரிடத்தில் விக்ஞாபித்துக்கொண்டார்கள். அப்போது கருணைக்கடலாகிய பரமேச்வரன் அவர்களுக்குத்தக்க விடையளித்து ஸர்வக்ஞ மூர்த்தியான தாமே வைதிகமதத்தை நிலைநாட்

டக்கருதி, கலி, 2593 கி மு 509இல் நந்தனவருஷ வைகாசி மீ சுக்லபக்ஷம் பஞ்சமி புனர்வஸு நக்ஷத்திரம் அபிஜின் முகூர்த்தத்தில், கேரளநாட்டில், காலடி க்ஷேத்திரத்தில் சிவகுருவின் பத்னியான ஆர்யாம்பாளின் உதரத்திலிருந்து குழந்தைவடிவமாக ஆவிர்ப்பவித்தனர்.

பிறகு பால்யத்திலேயே ஸந்யாஸம்பூண்டு ஸ்ரீ கோவிந்த பகவத்பாதாளை குருவாக அடைந்து, அவர்களின் அநுமதியால் உபநிஷத் பாஷ்யங்கள் முதலியவையியற்றி எங்கும் சிஷ்யர்களைப்பரவச்செய்து, துர்மதங்களைக்கண்டித்து, வைதிக ஷண்மதங்களை ஸ்தாபித்து, சிருங்ககிரி முதலிய மடங்களை ஏற்படுத்தித் தம்முடைய 32ம் ஆண்டில் ஸ்ரீ காமகோடி பீடத்தால் சோபிக்கப்பெற்ற ஸ்ரீ காஞ்சியில் ஸ்ரீபரமேசுவரரிடம் ஐக்கியப்பட்டபோதிலும் கீர்த்திசரீரத்தால் எங்கும் விளங்கிக்கொண்டு வருகிறார்கள்.

பக்தி.

संसाराख्यविशालनाटकगृहे सर्वाणि रूपाण्यहो
धृत्वाऽधोमुखयोनिकायवनिकां निर्हृत्य निर्गत्य च ।
सर्वज्ञस्य दयापरस्य तव देवाग्रे चिरं नृत्यतः
श्रान्तस्यापि ममालमित्युचितवागेवास्तु विश्राणनम् ॥

ஸ்ரீ கும்பகோணத்திற்கடுத்த திருவிசநல்லூர் என்ற வித்வத்கிராமத்தில் வஸித்த அய்யாவாள் என்ற சிவபக்த சிகாமணியானவர் சமத்காரமாய் பகவானிடம் மோக்ஷத்தையருளும்படி பிரார்த்திக்கின்றார்.

பரமேச்வரா! உமது முன்னிலையில் யான் வெகு காலமாய் நாடகமாடி வருகிறேன். உலகத்தில் நாடகமாடுவதற்கு விஸ்தாரமான நாடகசாலை வேண்டும். அனேக வேஷங்கள் தரிக்கவேண்டும். அனேகதிரைகள் வேண்டும். அத் திரைகளைத் தள்ளி வெளிக்கிளம்பியும் வரவேண்டும். அப்படி வருவதால் சரீரத்திற்குக் களைப்பு ஏற்படும். அவ் வாட்டத்தால் சபையிலுள்ளோர் சந்தோஷப்பட்டால், தகுந்தவெகுமதிகள் கிடைக்கும். அவைகளொன்றும் என் நாடகத்தில் குறைவில்லை. என்னுடைய நாடகசாலையோ மிகவும் விஸ்தாரமானது. எல்லையில்லாதது. அச் சாலைக்கு ஸம்ஸாரம் என்றுபெயர். அது எப்போதும் சலித்துக் கொண்டே யிருக்கக்கூடியது. ஓய்வில்லாமலே ஆடிய வண்ணமாயேயுள்ளது.

அதில் சகலவேஷங்களையு மெடுத்துக்கொண்டே வருகிறேன். அந்த வேஷங்கள் மிக ஆச்சரியமானவைகள். உலகத்தில் ஸாமான்யர்களால்போடக்கூடிய வேஷங்களைக் காட்டிலும் மிக மேன்மை பெற்றவைகளும் அபூர்வமாயுமுள்ளவைகள். அவைகள், மானிடமோ, மிருகமோ, பக்ஷியோ, புழுவோ, பூச்சியோ, ஸுகியோ, துக்கியோ, ஸாத்விகஸ்வபாவமுள்ளதோ ராஜஸஸ்வபாவமுள்ளதோ தாமஸஸ்வபாவமுள்ளதோ, எவ்விதமோ வர்ணித்துக் கூறமுடியாதவைகளும், எண்ணிறந்தவைகளுமாகும். அவைகளுக்கு ஏற்பட்ட திரைகளின்வழிகளோ, வெகுவிநோதங்களாயும் பயங்கரங்களாயும், எண்ணிறந்தவைகளாயு மிருக்கின்றன. அவைகளுக்கு யோனிகள் என்று பெயர். அவைகள் யாவும் கீழ்முகமான வாசற்படி யுள்ளவைகளாகும். அவைகள் எவ்விதமிருந்தாலும், எவ்வளவு காலந்தொட்டு ஆட்டம் நடத்திவருகிறேன் என்று சொல்லுவதற்கே இயலாதவ

ஞய் அத் திரைகளின் வழிகளால் கிளம்பி ஆடிக்கொண்டு வருகிறேன். அந் நாடகமும் கண்ணிற்குப் புலப்படுமோ புலப்படாதோ என்று தாங்கள் ஸந்தேஹிக்க அவகாசமேயில்லை. தங்கள் முன்னிலையிலேயே எக்காலம் ஆரம்பிக்கப்பட்டு ஆட்டம் நடந்துவருகிறது என்று என்னால் காலவரம்பு சொல்லக்கூடாவண்ணமாயிருப்பினும், தங்களால் கண்டுகொள்ளக்கூடியதே. எனெனில்,

தாங்கள் எல்லாமறிந்தவர். தவிரவும், பிறர் சிரமத்தையறிந்து ஸம்மானிக்கக்கூடிய தயா தாக்ஷிண்யம், ஔதார்யம் முதலிய ஸகல ஸத்குணங்களும் பொருந்தினவர். விசேஷமாகக் கூறவேண்டாம். ஸர்வக்ஞர் என்ற ஒருபதமே, தங்களுடைய சகல வல்லமைகளையும் சிறப்பித்துக்காட்டும். மேலும், நான், மிகவும் உயர்ந்ததாக கருதப்படும் பிரும்மலோகத்தையும் துச்சமாய் எண்ணுகிறவன். ஆகையால் எதையாவது கேட்டுவிடுவேனோ என்று தாங்கள்ஐயமுறவேண்டாம். வெகுகாலமாய் நாடகமாடிக் களைத்திருப்பவனுக்கு எதைக் கொடுக்கவேண்டுமோவென்று யோஜிக்கவேண்டாம். எனக்குத் தங்கள் முக கமலத்திலிருந்து ஒருஉசிதமான வாக்குமட்டிலும் வெளிக்கிளம்பினால் போதுமானது. அதாவது:— அடே! ஆட்டக்காரா! நீ ஆடினது போதும். உன் ஆட்டத்தை இதோடுநிறுத்திக்கொள். இனிமேல் இந்தத்தொழிலே உனக்குவேண்டாம் என்பதே. அதுவே எனக்குத்தகுந்த நித்ய நிரதிசயானந்தத்தைத்தரும் வெகுமானமாகும்.

இதனால் தங்களிடத்தில் பரமபக்தி செலுத்திவரும் என்னிடத்தில் தாங்கள் தயைகூர்ந்து அனாதிகாலமாய் ஜனன மரண ரூபமாய் சுழன்றுவரும் ஸம்ஸாரசக்ரத்தி

விருந்து விடுவித்து, மோக்ஷத்தை யநுக்கிரஹிக்கவேண்டும் என்று கருத்து வெளியாகிறது.

அவ்விதமே அம்மஹான்கள் பக்தியையேகைக்கொண்டு பரமேவசுர ப்ரஸாதத்தையடைந்தார் என்பது உலகப் பிரஸித்தமே. ஆகையால் யாவரும் பரமேசுவரனிடத்தில் பக்திசெய்து பேரானந்தத்தையடைய முயல வேண்டும்.

முடிவுரை.

உபன்யாஸ மஞ்ஜரீயென்ற இவ்வரிய வியாஸத்தில் தோன்றும் குணங்கள்யாவும் பரமாசார்யாளுடைய முககமலத்திலிருந்து வெளிப்பட்டவைகளாகும். தோன்றக்கூடிய தோஷங்கள்யாவும் என்னுடைய சிற்றறிவிற் கெட்டியவாறு சேர்த்துக்கொண்டவையாகும். ஆகையால் குணங்களைக்கிரஹித்துக்கொண்டு, தோஷங்களைத் தள்ளிவிடும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனக்கு பெரியோர்களின் சிறந்த வாக்கு ஒன்று நினைவுக்கு வந்தது.

रथ्योदकमिव गङ्गाप्रवाहपातः पवित्रयति ।

சாக்கடைகளினின்றும் பெருகிவிழும் துர்க்கந்தமான அழுக்குற்ற நீரும், கங்கையின் வெள்ளத்தில் சேர்ந்து, யாவரையும் புனிதமாக்குந்தன்மையையடைகிறது என்று

அதனால் தைரியம் ஏற்பட்டு இக்காரியத்தைத் தொடங்க முன்வந்தேன். ஆகையால் வைதிகர்களான ஆஸ்திகர்கள் யாவருக்கும், பரமாசார்யாள் தயைகூர்ந்து பேரின்பத்தையளிக்கவே முயன்று வருகிறதால், அம் மஹான்கள் உபதேசத்தை மனனம் பண்ணும்படி வேண்டுகிறேன்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
2	13	முருகவேல்	முருகவேள்
2	18	தவிறவும்	தவிரவும்
3	12	மேன்பட்ட	மேம்பட்ட
3	14	மிக்கச்சிறப்பு	மிகச்சிறப்பு
4	25	பாடதாகையால்	படாதாகையால்
6	5	உட்பெருளான	உட்பொருளான
10	7	வேதங்களைத்தேடி	வேதங்களையுந்தேடி
11	18	ஸ்மாமி	ஸ்வாமி
12	1	குழந்தையானது	குழந்தையான ஞானசம்பந்தரும்
17	12	வெற்றிப்பெற்றதாக	வெற்றிபெற்றதாக
18	3	என்கவே	என்னவே
18	6	என்க	என்ன
19	2	ரிருவடி	றிருவடி
19	4	ரோடகவத்	ரோடகத்
25	3	இயற்றினர். என்ற	இயற்றினர் என்ற
30	15	கண்ணை	கண்ணே
32	8	ஏற்பாடுசெய்	ஏற்பாடுசெய்யும்